**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**பரங்கிப்பேட்டை.**
**2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18-ஆம் நாள்,**
**CC. 216/2014**

The Oaths Act 1969 (Act 44/1969)-ன் விதிமுறைகளின் படி 18.03.2026-ஆம் தேதியன்று பரங்கிப்பேட்டை, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திரு.த.யுவராஜ் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. குமார் | வயது | : | 51 |
| த.பெ | : | திரு. குணால் | நிலை | : | **PW-5 (LW-13)** |

**Accused called absent. Defence counsel filed petition u/s 317 of Cr.P.C, perused and allowed. Learned APP is Present.**

**அரசு தரப்பில் முதல் விசாரனை -**

நான் தற்போது பூண்டியாங்குப்பம் மெயின்ரோட்டில் வசிக்கிறேன்.நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையெழுத்தை 2014-ஆம் வருடம் ஆலப்பாக்கம் ரயில்வேகேட்டில் நின்றிருந்த லாரியை கார் ஒன்று மோதியது சம்மந்தமாக போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரித்து படம் வரைந்ததற்கு சாட்சியாக பார்வைமகஜரில் நானும், கலியபெருமாள் என்பவரும் கையொப்பம் செய்தோம். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.1**-ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சி கலியபெருமாளுக்கு தற்போது உடல்நிலை சரியில்லாததால் நீதிமன்றத்திற்கு அவரால் வரமுடியவில்லை. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

நான் ஆலப்பாக்கம் ரயில்வேகேட் அருகே தேசிய நெடுஞ்சாலையில் இளநீர் மற்றும் பனை வெல்லம் வியாபாரம் செய்து வருகிறேன். ஆலப்பாக்கம் ரயில்வேகேட் அருகே வேகத்தடை உள்ளதால் அங்கே பேருந்துகள் நின்று பயணிகளை ஏற்றி செல்வது வழக்கம் என்றாலும் அங்கு மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும் என்றாலும் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் போட்டேன்

என்றால் சம்பவ இடத்தின் அருகே கடை வைத்திருப்பதால் போலிசார் கையொப்பம் இடசொல்லி கேட்டதால் போட்டேன். பார்வை மகஜரில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றாலும் கையொப்பம் போடச்சொல்லி கேட்டதால் போட்டேன் என்றாலும் சரிதான்.

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டிய பின்பு அவர் சரியென கையொப்பமிட்டார்.**

**(ஒம். திரு.த.யுவராஜ்)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**பரங்கிப்பேட்டை.**